036

**012/DM/24**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.**

(4 × 25 = 100)

1. Translate the following into English.

சென்னையில் வாழும் பொதுமக்களில் பலரும், தேவையில்லாமல் தேங்கி நிற்கும் தண்ணீரை அகற்றுவதிலும் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்குவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். அவர்கள், சாலைகளின் மூலைகளிலும் பாதைகளின் ஓரங்களிலும் தண்ணீர் சேமிப்புக் கிணறுகளை அமைத்து வருகிறார்கள்.

இந்தத் தண்ணீர்ச் சேமிப்புக் கிணறுகளைச் சிறிய அளவில் சாலைகளின் மூலைகளில் அல்லது மழைநீர்ச் சேகரிப்புத் தொட்டிகளில் அவர்கள் அமைத்து வருகிறார்கள். இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள குடியிருப்போர் நலச்சங்கத்தின் சார்பில் இது போன்ற பன்னிரண்டு தண்ணீர்ச் சேமிப்புக் கிணறுகளை அங்குள்ள முதல் நெடுஞ்சாலையிலும் நான்காம் நெடுஞ்சாலையிலும் இரண்டாவது குறுக்குத் தெருவிலும் உள்ள சாலைகளின் மூலைகளிலும் தண்ணீர் தேங்கும் இடங்களிலும் அமைத்துள்ளார்கள்.

இந்தத் தண்ணீர்ச் சேமிப்புக் கிணறுகளை உருவாக்குவதற்கு மழைநீர் சேகரிப்பு மையம் இவர்களுக்குத் தொழில் நுட்ப உதவிகளை வழங்கியுள்ளது. 'இத்தகைய தண்ணீர்ச் சேமிப்புக் கிணறுகளைப் பொது மக்களின் உதவியுடன் தண்ணீர் தேங்கும் இடங்களில் நாங்கள் அமைத்துள்ளோம். மாநகராட்சிப் பொறுப்பாளர்கள் இத்தகைய எங்களின் செயல்பாடுகளுக்குப் போதிய நிதியுதவி வழங்கி உதவிட வேண்டும்' என்று இராஜா அண்ணாமலை நகர் குடியிருப்போர் நலச்சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

[Turn over

2. Translate the following into English.

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு மற்றும் சேவை நிறுவனத்தின் சார்பில் 53 மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசத் திருமணம் சென்னையில் ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழக ஆளுநரின் தலைமையில் நடைபெற்றது.

ஆளுநர் தனது தலைமையுரையில் 2011இல் நடைபெற்ற மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 11.79 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் இருப்பதாகவும் தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் இது 1.63% என்றும் இந்தியாவில் உள்ள மொத்த மாற்றுத்திறனாளிகளில் இது 4.4% என்றும் தெரிவித்தார். அண்மையில் வெளியான நாடாளுமன்றக் குழுவின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை 2017-2018 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி இந்தியாவில் உள்ள 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மாற்றுத்திறனாளிகளுக்காகத் தனித் துறைகள் செயல்படுகின்றன. அவற்றில் ஒன்று தமிழ்நாடு என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் சமூக நலம், சத்துணவு மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத் துறைகளுக்கான அமைச்சர் தனது உரையில், தமிழ்நாடு அரசு, மாற்றுத்திறனாளிகளுக்காக 543 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது எனக் குறிப்பிட்டார். இந்த இலவசத் திருமணத்திற்கு மாற்றுத் திறனாளிகளை நன்கு ஆராய்ந்த பின்னரே தேர்வு செய்வதாகவும், மாற்றுத்திறனாளிகள் வழங்கும் ஆவணங்களின் அடிப்படையில் அவற்றை நன்கு பரிசீலனை செய்து அவர்களை ஒவ்வொருவருக்கும் அறிமுகம் செய்வதோடு அவர்களின் குடும்பத்திற்கும் முறையாகத் தெரிவித்துத்தான் இந்தத் திருமணங்கள் நடைபெறுகின்றன எனத் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு மற்றும் சேவை நிறுவனத்தின் செயலாளர் தெரிவித்தார்.

3. Translate the following into English.

தமிழக மக்கள் அனைவரும் தங்கள் கைகளைக் கோர்த்தபடி மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பரப்ப முன் வர வேண்டும் என தமிழ்நாட்டின் ஆளுநர் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தெரிவித்தார். காந்தி மண்டபத்தில் மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்தில் அவரது சிலையை நிறுவிய ஆளுநர் அங்கு கூடியிருந்த மாணவர்களையும் பொதுமக்களையும் பார்த்து இவ்வாறு கேட்டுக்கொண்டார். அவர் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ள ஏழு பாவங்களும் நாட்டையே அழித்துவிடும் என்றும் அவற்றை வேரோடு அகற்றும்போதுதான் நாடு நன்னிலை அடையும் என்றார்.

இந்த ஏழு பாவங்களையும் அகற்றினால் மட்டுமே நாம் பெற்ற சுதந்தரத்தின் பயனை வருங்காலச் சந்ததியினருக்கு விட்டுச் செல்ல முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

வேலை செய்யாமல் வரும் வருமானம், மனசாட்சி இல்லாத மகிழ்ச்சி, நற்பண்பு இல்லாத அறிவு, நேர்மை இல்லாத வணிகம், மனிதாபிமானம் இல்லாத அறிவியல், தியாகம் இல்லாத மதம், கொள்கை இல்லாத அரசியல் என்னும் இந்த ஏழு பாவங்களும் அகற்றப்படவேண்டும். நாம் காந்தியின் கொள்கைப்படி நடந்தால் அது இந்தச் சமுதாயத்தை அமைதி, முன்னேற்றம், வளத்தை நோக்கி அழைத்துச் செல்லும் என ஆளுநர் உரையாற்றினார்.

4. **Translate the following into English.**

சென்னை மெட்ரோ இரயிலின் சுரங்கப் பாதை இரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள மேற்கூரையில், விழும் நிலையில் இருந்து 50 மேற்கூரை ஓடுகள் மாற்றப்பட்டுள்ளன என மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சென்னை, ஷெனாய் நகர் மெட்ரோ இரயில் சுரங்க நிலையத்தில் உள்ள மேற்கூரையிலிருந்து ஓடு ஒன்று பெயர்ந்து, பயணி ஒருவரின் தலையில் விழுந்து காயம் அடைந்ததால் இவ்வாறு மேற்கூரை ஓடுகள் மாற்றப்பட்டுள்ளன.

மெட்ரோ இரயில் நிலைய அதிகாரிகள் அந்த விபத்துக்குப் பின் உடனடியாக எத்தனை நிலையங்களில் அதுபோன்று விழும் நிலையில் ஓடுகள் உள்ளன என ஆய்வு செய்ததாகக் கூறினர். அவ்வாறு சுரங்க இரயில் நிலையத்தின் மேற்கூரையில் விழும் நிலையில் இருந்த 50 ஓடுகளைப் பெரும்பான்மையான சுரங்கப் பாதை நிலையங்களில் மாற்றியமைக்காமல் சிமெண்ட் கலவையால் உறுதியாகப் பூசி அவற்றின் மேல் வண்ணம் பூசியுள்ளோம் என மெட்ரோ இரயில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுரங்க இரயில் நிலையத்தின் மேற்கூரை ஓடுகள் ஏன் விழுகின்றன என்பதற்கு மெட்ரோ இரயில் அதிகாரிகள் காரணம் தெரிவிக்க மறுத்துவிட்டனர். முறையற்ற கட்டுமானத்தாலும் தொழில்நுட்பம் இல்லாத பணியாளர்களாலுமே இவ்வாறு மேற்கூரை ஓடுகள் விழுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சுரங்க இரயில் நிலையங்களில் அந்த உயரத்தில் மேற்கூரைகளில் ஓடுகள் பதிப்பதற்குத் திட்டமிட்டதே தவறு என்று மேலும் அவர்கள் தெரிவித்தனர். கூரை ஓடு பெயர்ந்து விழுந்ததைப் போல் சில சுரங்கப் பாதை இரயில் நிலையங்களில் தடுப்புக் கண்ணாடிகளும் உடைந்து விழுந்துள்ளன.

---